# பாண்டியூரானின் கவிதைகள் – ஓராய்வு

*த. மேகராசா*
கலாநிதிப்பட்ட ஆய்வாளர்
கிழக்குப் பல்கலைக்கழகம்

மலர்: 4
இதழ்: 3
மாதம்: ஜனவரி
வருடம்: 2020
P-ISSN: 2454-3993
E-ISSN: 2582-2810

### அறிமுகம்

ஈழத்து நவீன தமிழ்க்கவிதை வளர்ச்சியின் மூலவர்களாக் கொள்ளப்படுவோர்களுள் ஒருவராகவுள்ள நீலாவணன் கிழக்கிலங்கையைச் சேர்ந்தவர். இவ்விதத்தில் கிழக்கிலங்கைக்குத் தனித்துவமான இடமுண்டு. நீலாவணனைத் தொடர்ந்து நவீன கவிதை மரபைக் கிழக்கில் முன்னெடுத்துச் சென்ற கவிஞர்களுள் ஒருவராகவே பாண்டியூரான் விளங்குகின்றார். பாண்டியூரான் பற்றிய ஆய்வுகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. பாண்டியூரானின் கவிதைகள் பற்றிய முதலாய்வாக இதுவே அமைகின்றது. இவ்வாய்வு கிழக்கிலங்கையிலுள்ள பாண்டிருப்பைப் பிறப்பிடமாகக்கொண்ட தமிழாசிரியரான பாண்டியூரானின் கவிதைகளை ஆய்வுக்குட்படுத்தி அவரது கவிதைகளின் தனித்துவத்தை எடுத்துக்கூறுவதாக அமைகின்றது.

### உலகளாவிய நோக்கு

குறிப்பிட்ட குலம், சாதி கடந்து உலகலாவிய நோக்குடன் மானுடத்தன்மையோடு கவிதையிற்றுகின்றவர்களே உண்மையான கவிஞர்கள். தன்னினத்தின் மீது தொடுக்கப்படும் கொடுமைக்கெதிராக மட்டுமன்றி உலகில் எப்பாகத்தில் கொடுமைகள் மேலோங்கிக் காணப்பட்டாலும் அக்கொடுமைக்கெதிராகக் கிளந்தெழும் சக்தியுடையோரே கவிஞர்களாவர். அத்தகைய சால்புமிக்க கவிஞர்களுள் ஒருவராகவே பாண்டியூரான் விளங்கியுள்ளார். தான் வாழ்ந்த காலத்தில் நைஜீரிய மக்கள் அனுபவித்தை துன்பத்தைக் கண்டு பொறுக்கொணாது அம்மக்களுக்காக இரங்கி அவர் பாடிய "இதய நோ" என்ற கவிதை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது. அக்கவிதையின் பின்வரும் பகுதி அவரது உலகலாவிய பரந்த மனிதாய நோக்கை எடுத்துக் கூறுகின்றது.

**மனத்திலே வளரும் தீயை**
**மடியிலே கட்டுகின்ற**
**சனத்திலே ஒருவன்**
**என்றன் சாதியோ மனிதசாதி!**
**இனத்தினால் இணைந்ததாலே இகத்தனுக்கு**
**உற்ற இன்னல்**
**எனக்கு நேர்கின்றதாக**
**இதயநோ எடுக்குதிங்கே!**
**இதயமுள்ளோர்கள் அங்கே இல்லையோ?**
**நைசீரியா**
**புதைகுழி நிரப்புகின்ற போர்க்களம்**
**ஆவதேனோ?**
**சதைகளை அரிந்தே அன்னார் சஞ்சலம்**
**துடைப்பதற்குப்**
**பதைபதைக்கின்றதுள்ளம்படைக்கலம்**
**கண்ணீராமோ?**

பின்னாளில் ஈழத்தில் தமிழ் மக்கள், சந்தித்த துன்புறுத்தலுக்குச் சாமாந்தரமாக நைஜீரிய மக்கள் அனுபவித்த துன்பத்தைப் பற்றியதாக மேற்படி கவிதை அமைந்துள்ளது.

### காலனித்துவத்தை எதிர்த்தல்

காலனித்துவம், கீழைத்தேய நாடுகளை அடிமைப்படுத்தி தனது மொழி, பண்பாடு, அரசியல் நெறிமுறைகள், வாழ்க்கை முறைகளை மக்களிடம் திணித்தது. இதனால் காலனித்துவத்திற்கு இரையாக்கப்பட்ட மக்கள் தம் அடையாளங்களை இழக்க நேரிட்டனர். காலனித்துவ ஒடுக்குமுறைகளை எதிர்த்த சுதேசிகளைத் தமக்கெதிரான கிளர்ச்சியாளர்களாகக் கருதிய காலனித்துவ ஆட்சியாளர்கள், அத்தகையோரை சிறைகளில் அடைத்தனர். இவ்வாறு பல சுதந்திர விடுதலை வீரர்கள், தலைவர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டனர். காலனித்துவத்தால் மிக மோசமாகப்பாதிக்கப்பட்ட நாடுகளுள் ஆபிரிக்கா ஒன்றாகும். ஆபிரிக்காவின் நெல்சன் மண்டேலா கீழைத்தேய மக்களால் மிகவும் விருப்பப்பட்ட ஒருவராகக் காணப்பட்டார். அதற்குக்காரணம் அவர் காலனித்துவத்தால் ஒடுக்கப்பட்ட மக்களின் தலைவராக மனதில் இடம்பிடித்திருந்தமை யாலாகும். பின்காலனித்துவ கருத்தியலில் கீழைத்தேய விடுதலைவீரர்களைப்போற்றுதல் முக்கியமானதொரு அம்சமாகும். மண்ணையும் மரபுகளையும் மக்களையும் நேசித்த பாண்டியூரான் நெல்சன் மண்டேலாவைப் பற்றியும் கவிதை எழுதியுள்ளார். “நெல்சன் மண்டேலா” என்ற தலைப்பில் அவர் எழுதிய கவிதை முக்கியமானதாகும்.

**ஓ! இனிய மண்டேலா எனது பாக்கள்**
**உலகம் உன் இதயத்திற் சொரியும் பூக்கள்!**
**சாவற்ற மனிதத்தின் சரித்திரம் நீ,**
**சருகென்ற இனபேதம் எரிக்கும் செந்தீ!**
**ஏமாற்றி வோத்தாவை எதிர்க்கும் வீச்சம்!**
**ஏ! வெள்ளை வெறியாட்சிக் கிழிவே கூச்சம்!**
**ஓ! இனிய மண்டேலா எனது பாக்கள்**
**உலகம் உன் இதயத்திற் சொரியும் பூக்கள்!**

என்றவாறு உணர்வோட்டத்துடன் விடுதலை வீரனுக்குக்கொடுக்கும் வீச்சான வரிகளால் கவிதையை நீட்டிச்செல்கின்றார் கவிஞர்.

### வாழ்வியல் நோக்கு

சமூகத்தின் வாழ்வியல் அம்சங்களை யதார்த்தபூர்வமாக வெளிப்படுத்துவதென்பது நவீன கவிதையின் முக்கிய பண்பாகும். “இல்லாமை” பற்றிப் பாடாத கவிஞர்களில்லை. நீலாவணனின் “இன்று உனக்கு சம்பளமா?” மற்றும் குறிஞ்சித் தென்னவனின் “சம்பளநாள்” முதலான கவிதைகள் இப்பொருள் பற்றியே பேசுகின்றன. இப்பாடுபொருள் பற்றி பாண்டியூரானின் “துயர்ப்பயணம்” என்ற கவிதை அமைந்துள்ளது:

**அப்பாவின் சம்பளம்**
**அன்று வெட்டுப்பட்டதென்று**
**முப்பாலகர்க்கும் உணரமுடியவில்லை!**
**எப்போதும் போல**
**இனிப்பென்றான் சின்னமகன்**
**சப்பாத்து இல்லையென்று**

***சண்டையிட்டான் மூத்தமகன்!***
***தப்பா தொருரூபாய் தந்திடுக***
**சேமிப்பு உண்டியலிற் போடவென்று**
**உட்குமைந்தாள் செல்லமகள்**
**.....................................**
***முப்பதுநாட் சம்பளத்தில்..***
***மூன்றிலொன்றைப் பெற்றுவந்து***
***எப்படித்தான் திங்களொன்றை***
***எண்மர் நடத்துவதோ?***
***நாங்கள் நடுத்தரத்தில்***
***நாயினுங்கீ ழானவர்கள்***
***நாங்கள், திரிசங்கு சொர்க்கப்பிராணிகளே!***
***எங்களையும் வாழ விடுங்கள்***
***எரிதணலை***
***எங்கள் வயிற்றில் எறிந்து***
***விளையாடாதீர்!***

என்று வறுமைத்துயரைப் பாடிச்செல்லும் கவிஞர் இறுதியில்

***எங்கோ ஒருநாள்***
***இடர்ப்பாதை முற்றிலும்!***
**பொங்கி யெழுவோம்**
***புவியைச் சமன்செய்து பங்கிடுவோம்***
***இன்பம் பகிர்ந்து!***

என்று அடிமை வாழ்வுக்கெதிராக ஒன்று சேர்ந்து எழுவோம் என்ற எச்சரிக்கையினையும் அழுத்தமாக வெளிப்படுத்தியுள்ளார். இது கவிஞரிடத்துக் காணப்படும் அநீதியை எதிர்க்கும் குணத்தைப் புலப்படுத்துகின்றது. கவிஞர் மக்களின் வாழ்வியல் கூறுகளுள் ஒன்றாக அமையும் அதுவும் பாண்டிருப்பு மக்களின் வாழ்வோடு இணைந்த திரௌபதையம்மனின் தீப்பள்ளயச் சடங்கினையும் அதனூடாக பாண்டிருப்பின் தனித்துவத் தினையும் வெளிப்படுத்தி "தீப்பள்ளயம்" என்ற தலைப்பில் எழுதியுள்ள கவிதையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## அரசியல் நோக்கு

வாழ்வியலுடன் பின்னிப்பிணைந்தவொன்றாக அரசியல் காணப்படுகின்றது. எழுபதுகளின் பிற்பகுதியில் தமிழீழம் பற்றிய அழுத்தமான கோசங்கள் எழுந்தன. சுயாட்சியை ஏற்படுத்தும் நோக்கில் தமிழரசுக் கட்சியினர் மிகத் தீவிரமாக, பிரதேசங்கள்தோறும் தமது கட்சிக் கிளைகளை நிறுவி வந்தனர். இப்பின்புலத்தில் தமிழரசுக் கட்சியின் நிறுவுநரான தந்தை செல்வா மிகவும் எழுச்சி மிக்க தலைவராக நோக்கப்பட்டார். அவரைப் பற்றி "செல்வா பிறந்திலரேல்" என்ற தலைப்பில் பாண்டியூரான் கவிதை எழுதினார். அரசியல் தலைவரை வாழ்த்திப்பாடும் வகையில் கவிதை இயற்றிய அதேவேளை மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் தலைவர்களின் போலி நடத்தையையும் துணிச்சலோடு வெளிப்படுத்தினார்.

***நாட்டோர் வியக்கும் நடையுடைய***
***ஐயாவே***
***ஓட்டுப்போட் டீரார்***
**உமைத்தேர்ந்த போதையிலே**
***பாட்டிணக்கி வாழ்த்துமடற்***
***பத்திரமும் தந்தவர் நாம்***
**....................................**
**நேர்த்திக் கடனென்று**
***நிச்சயமாய் செய்வேன் நான்***
***சீர்த்தியுடன் ஐயா***
**செவிசாய்த்து என்னுடைய விண்ணப்பம்**
**இஃதை வினைப்படுத்தித் தந்திடுக**
**மண்மறையும் மட்டுமுமை**
**மாண்புடனே போற்றிடுவேன்**
***ஐயா***
**எனது அருமைப் புதல்வர்கள்**
**"கைவாறு"க்காரர் உம் கைபோன்ற**
**கையாட்கள்**
**கோழி, கிழங்கு, இநீர், குடம், சட்டி,**
**வாளி, உலக்கை, தளவாடம், மண்வெட்டி**
***சீனி, மா, சட்டை, செருப்புத் திருடர்களாம்***
**மானியென்றன் மக்கள் வழிப்பறியும்**
**செய்தாராம்.**
**என்று நமது எதிர்ப்பாட்டிக்காரர்கள்**
**ஒன்றின்மேலொன்றாய்...**

**ஒரு கொள்ளைக் குற்றத்தைத்**
**தாக்கல் செய்துள்ளார்**
**தலைதூக்க ஏலுதில்லை**
**போக்கிரிகட் கெல்லாம் புதுப்பாடம்**
**கற்பிக்க**
**நல்ல தருணமிது நழுவ விடாதீர்கள்.**

இவ்வாறு தற்காலத்திற்கும், எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய வகையில் கவிஞரின் கவிதை தொடர்வதைக் காணலாம். இத்தகைய பல கவிதைகளை பாண்டியூரான் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மொழியும் தாய்நாடும்

மொழியுணர்வைப் பாடியோருள் கிழக்கிலங்கைக் கவிஞர்களுக்கு முக்கிய இடமுண்டு. ஆரையூர் அமரன், காசி ஆனந்தன், ராஜா பாரதி, ஜீவா ஜீவரெத்தினம், எருவில் மூர்த்தி என நீளும் வரிசையில் பாண்டியூரானும் இடம்பெறுகின்றார். இவரது தமிழின்றி நாமில்லை என்ற கவிதை இவ்வகையில் முக்கியமானதாகும். தாய்நாட்டுணர்வை வெளிப்படுத்திய கவிஞர்களுள் ஒருவராகவும் இவர் திகழ்கின்றார்.

**எந்தையர் ஆண்ட பொன் நாடு - தமிழ்**
**ஈழமெனும மணித்தாய் திருநாடு**
**சொந்தம தாகிய தின்றே - பிறர்**
**சூழ்ச்சி சுரண்டல் முளைத்தலும் அன்றே**
**இந்த நிலம் உயி ராகும் - இவள்**
**ஈன்றவ ருட்புது மைப்பயிராகும்.**
**எந்தவளமிவட் கில்லை? - இவட்**
**கில்லா வளமுல கத்திடையில்லை**

### பாதுவுடைமை நோக்கு

ஏழை-பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து மக்கள் அனைவரும் ஓர்குலம் என்ற நிலையை ஏற்படுத்தும் வகையில் பொதுவுடைமை நோக்கில் பல கவிதைகள் வெளிவந்துள்ளன. அத்தகைய போக்கில் பாண்டியூரானும் கவிதை எழுதியுள்ளார். “நாங்கள் பாட்டாளிகள்” என்ற தலைப்பில் அவரெழுதிய கவிதை இவ்விடத்தில் கவனம் பெறுகின்றது. அக்கவிதையின் பின்னுள்ள வரிகள் எடுத்துக்காட்டாகத் தரப்படுகின்றன:

**உருளும் இவ் வுலகில் ஒன்றுதான் நாங்கள்**
**உழைப்பவர் யாவரும் ஒன்றே!**
**அருவருப்போடு அடிமை என்றெம்மை**
**ஆக்கியோர் நம் அடி வீழ்ந்தார்.**
**செருப்புகள் இல்லை உழைப்பவர். செந்தீ**
**செழிப்பினை ஆக்கிடுந் தெய்வம்**
**........................................**
**சாதியில் நாங்கள் மானுடர் எங்கள்**
**சந்ததியோ, தொழில் ஆளர்.**
**ஆதியில் யாரும் ஆடையில் லாமல்**
**அவனியி லே பிறந் திட்டோம்**
**பாதியில் வந்த பற்பல கோலப்**
**பகடிகள் யார்படிப் பித்தார்**
**வாதிடோம் இந்த வையகம் எங்கள்**
**வர்க்கமே! யார்மறுப் பாரோ?**

### படைப்பாக்க உத்தி

கவிஞர் பாண்டியூரான் தன் காலத்து சமூக, அரசியல் விடயங்களைப் பேசுவதற்கு புராண, இதிகாச தொன்மங்களைக் கையாண்டுள்ளார். இது அவரது படைப்பாக்க ஒத்திகளுள்ஒன்றெனலாம். அவரது“நவகீதை” என்ற கவிதை இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். அவர் காலத்தில் எழுந்த தாயக வேட்கையினையே மேற்படி கவிதை பிரதிபலித்து நிற்கின்றது. மகாபாரதத்தில் வரும் அர்ஜுனன் பாத்திரத்தைத் தாயக மீட்புக்கான விடுதலை வீரனாகச் சித்திரித்து கவிதையை அமைத்துள்ளார். இக்கவிதையில் வரும் பின்னுள்ள வரிகள் கவனிக்கத் தக்கவையாகும்:

**தாயகமும், நாளைத் தலைமுறையும்,**
**ஊழிவரை**
**ஓயா அதர்மத்தின் உத்தரிப்பில்**
**மாளுவதா....?**

**வேளை விடிவை விரைவாய்**
**நெருங்குவதால்**
**நாளைக்கடத்தேல்! நடமுன்**
**நெருப்பே போல்!**
**தக்கோர்தகாதோர்**
**தரணியில் யாரெனினும்**
**சிக்கறுப்பின் முன்னே சிராய்போல்**
**மனங்கிழித்தால்**
**காண்டீபம் ஏந்திக்**
**கருமஞ்செய் அர்ஜுனா!**

புதுக்கவிதை மரபை நிராகரித்த நீலாவணனின் தொடர்ச்சியாகவே பாண்டியூரானும் காணப் படுகின்றார். தாக்குவலுவுடைய மொழி நடையைக் கையாண்டு யாப்போசை மரபிலிருந்து மாறுபடாதவகையில் இவரது கவிதைகள் அமைந்துள்ளன. ‘‘மனத்திலே தீயை..’’ என மேற்கூறியுள்ள கவிதை இதற்கும் எடுத்துக்காட்டாக அமையத்தக்கதாகும்.

கிழக்கிலங்கைச் சடங்குப் பாடல்களில் பெரிதும் கையாளப்படுள்ள “இயைபு” அமைப்பை நவீன கவிதையில் சிறப்பாகக் கையாண்டுள்ளார் கவிஞர் பாண்டியூரான். “தொடை”யின் அடிப்படைக் கூறுகளுள் ஒன்றாக அமையும் “இயைபு” பாடலில் ஓசை இன்பத்தினை ஏற்படுத்துவதற்காக பயன்படுத்தப்படுவதைக் காணலாம். பாடலடிகளின் ஈற்று எழுத்தோ அல்லது சொல்லோ இணைப்புற்று வருவது “இயைபு” அமைப்பாகும். ஒவ்வாரு வரியின் ஈற்றில் ஒலி ஒற்றுமையை ஏற்படுத்து வதற்கும் கேட்போருக்கு இனிமையை ஏற்படுத்துவதற்கும் இவ்வுத்தியினைப் புலவர்கள் கையாண்டுள்ளனர். தமிழ் மரபிலிருந்து விலகாது பாண்டியூரான் கவிதைகளை எழுதியுள்ளார் என்பதற்கு இவரது இத்தகைய கவிதையாக்க உத்தி எடுத்துக்காட்டாக அமைகின்றது. இவரது ‘‘நெல்சன் மண்டேலா’’ என்ற கவிதையில் வரும் பின்னுள்ள வரிகள் எடுத்துக்காட்டாகத் தரப்படுகின்றன:

**பிரிட்டோரியா நாட்டிற் பொற்சுரங்கம்**
**பிறப்பித்த கறுப்பர்க்குச் சிறையரங்கம்!**
**கருக்கொண்டல் மண்டேலா கருத்தோ வெள்ளம்**
**கருக்கட்டிற்றே புனைக் கண்ணிற் குள்ளம்!**
**வெருட்டிக்கை தேர்ந்திட்ட வெறியர் ஆட்சி**
**வீழ்ச்சிக்கு நெருங்கிற்று விதியின் மாட்சி!**
**இருட்கண்டமா அந்த ஆபிரிக்கா**
**எறிசோதி யுனக்கீடாய் ஆரிருக்கா?**

## முடிவுரை

தொகுத்து நோக்குமிடத்து கவிஞர் பாண்டியூரான் கிழக்கிலங்கையின் முக்கியமான கவிஞராகத் திகழ்ந்துள்ளார். நீலாவணனின் தொடர்ச்சியாகக் கிழக்கிலங்கைக் கவிதையை வளர்த்துச்சென்றுள்ளார். சமகால வாழ்வியலைக் கவிதையின் பொருளாக்கியுள்ளார். அவற்றை மரபார்ந்த யாப்பு முறைகளிலிருந்து விடுபடாது அதேவேளை நவீன கவிதை மரபைப் பின்பற்றிக் கவிதைகளை எழுதியுள்ளார். புராண, இதிகாச தொன்மங்களை படைப்பாக்க உத்தியாகக் கையாண்டுள்ளார். தவிர மண், மரபுகள் என்ற தடத்தினூடாக கவிதையை முன்னெடுத்துச் சென்றுள்ளார்.

## உசாத்துணைகள்

1. யோகராசா, செ. (2007), ஈழத்து நவீன கவிதைகள்: புதிய உள்ளடக்கங்கள் - புதிய தரவுகள்- புதிய போக்குகள், கொழும்பு: குமரன் புத்தக இல்லம்
2. பாண்டியுரான் கவிதைகள் (சேகரிப்பில் உள்ளவை)
3. நீலாவணன், (2001), ஒத்திகை - நீலாவணன் கவிதைகள், இலங்கை: நன்னூல் பதிப்பகம்.